**செ.வெ.எண்: 52** **நாள்: 27.01.2026**

# பத்திரிக்கைச் செய்தி

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அரசாணை நிலை எண்.219 சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் (EAPI-1) துறை, நாள்:06.07.2023 மற்றும் தேசிய நலக் குழும திட்ட கடித எண்.6901/P12/NVCHP/NHM/2021 நாள்:27.12.2022-ன்படி, அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் செயல்பட்டு வரும் பல்வேறு மருத்துவத்துறைகளுக்கு தேவையான கீழ்க்காணும் **நுட்புநர்கள் பணியிடங்களுக்கு தற்காலிக மற்றும் தொகுப்பூதிய அடிப்படையில் பணிநியமனம்** செய்யப்பட உள்ளது.

1. **பதவியின் பெயர்** : **டயாலிசிஸ் டெக்னீஷியன்**
   **காலிப்பணியிடம்** : 02
   **கல்வித்தகுதி** : டயாலிசிஸ் தொழில்நுட்பத்தில் பி.எஸ்சி., தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (அல்லது) டயாலிசிஸ் தொழில்நுட்பத்தில் டிப்ளமோ (அல்லது) டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் அல்லது மாநில அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட டயாலிசிஸ் தொழில்நுட்ப வல்லுநரில் ஒரு வருட சான்றிதழ் படிப்பு.

2. **பதவியின் பெயர்** : **EMG டெக்னீசியன்**
   **காலிப்பணியிடம்** : 01
   **கல்வித்தகுதி** : டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் அல்லது மாநில அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட EMG தொழில்நுட்பவியலில் டிப்ளமோ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். EMG-யில் பணிபுரிந்த அனுபவம் இருக்க வேண்டும்.

3. **பதவியின் பெயர்** : **எக்ஸ்ரே டெக்னீசியன்**
   **காலிப்பணியிடம்** : 02
   **கல்வித்தகுதி** : டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் அல்லது மாநில அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ரேடியோ டிக்னோசிஸ் தொழில்நுட்பத்தில் (டி.ஆர்.டி.டி) பி.எஸ்சி., ரேடியாலஜி (அல்லது) டிப்ளோமா சான்றிதழ் படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

4. **பதவியின் பெயர்** : **பேச்சு சிகிச்சையாளர்**
   **காலிப்பணியிடம்** : 01
   **கல்வித்தகுதி** : டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் அல்லது மாநில அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட ஆடியாலஜி மற்றும் ஸ்பீச் தெரபியில் பி.ஏ.எஸ்.எல்.பி., இளங்கலை ஆடியாலஜி & ஸ்பீச் லாங்குவேஜ் பேத்தாலஜி (OR) டிப்ளமோ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

5. **பதவியின் பெயர்** : **விபத்து காய பதிவு உதவியாளர்**
**காலிப்பணியிடம்** : 03
**கல்வித்தகுதி** : அவசர சிகிச்சை பிரிவில் பி.எஸ்சி., தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அல்லது அவசர சிகிச்சை பிரிவில் ஒரு வருட டிப்ளமோ படிப்பை முடித்திருக்க வேண்டும் அல்லது டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் அல்லது மாநில அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட பொது நர்சிங் மற்றும் மருத்துவச்சி பிரிவில் பி.எஸ்சி. நர்சிங் டிப்ளமோ முடித்திருக்க வேண்டும். அடிப்படை கணினி அறிவு பெற்றிருக்க வேண்டும்.

6. **பதவியின் பெயர்** : **சக ஆதரவாளர்**
**காலிப்பணியிடம்** : 01
**கல்வித்தகுதி** : i) டாக்டர்.எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் அல்லது மாநில அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட பொது நர்சிங் மற்றும் மருத்துவச்சி பிரிவில் பி.எஸ்சி நர்சிங் (அல்லது) டிப்ளமோ தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
ii) ஹெபடைடிஸ் பி (அல்லது) சி நோயால் பாதிக்கப்பட்ட அல்லது குணமடைந்த நபர் / நோயாளியின் குடும்ப உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்காணும் பதவிக்கு தகுதியும்விருப்பமும் உடையவர்கள் சுய விவரத்துடன் கூடிய கடவுச்சீட்டு அளவு புகைப்படம், கல்வித்தகுதி சான்று, முன் அனுபவ சான்று, ஆதார் அட்டை நகல் ஆகிய விவரங்களுடன் தேவையான சான்றிதழ்களின் நகல்களுடன் முதல்வர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை அரியலூர், 621 713 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: 06.02.2026. 5 PM.** என **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**